**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.209/2018**

PW 1 – கார்த்தி, த/பெ. பரமசிவம்
நாள் – 20.11.2023.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

இடைமனு எண். 4/23 , நாள் 15.11.2023 தேதிய இந்நீதிமன்ற உத்தரவுப்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

17.09.2016 தேதியிட்ட சீர்காழி வட்டாட்சியர் வழங்கிய அனுபவ சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தை மண் பரிசோதனை செய்தற்காக வழங்கப்பட்ட மண் பரிசோதனை நிலையம், நாகப்பட்டினம் அலுவலகம் வழங்கிய சான்றின் இணைவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தை பயிர் காப்பீடு செய்தற்கான இணைவழி ரசீதின் நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மை குறித்து பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.